உ

கடவுள் துணை.

# பாய்ச்சலூர்பதிகம்.

திருப்போரூர்
டி. கோபால் நாயகர்
அவர்களாற்றமது

மதராஸ், என். சி.
கோள்டன் அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது.

1914.

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதராஸ் என். சி.

45

# விளம்பரம்.

இதனால் சகலருக்கும் அறிவிப்பது, சென்னை, சூளை, வேப்பேரிக்குச்சேர்ந்த காளத்தியப்பமுதலி வீதி, 17-18வது ந[illegible] வீட்டில் ஸ்தாபித்திருக்கும் கோன்டன் அச்சுயந்திரசாலையில் இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு, ஸ்கூல்புத்தகங்களும்; அநேகவித மருந்துகளும், விசித்ரமான ரப்பர் ஸ்டாம்புகளும் ரப்பர் எழுத்துகளும், ஸ்டீரியோ பிலேட்டுகளும், ஜர்மன் சில்வர் நகைகளும். அத்தர் தினுசுகளும், டொப்பி தினுசுகளும், போஸ்டுகியார்டு அளவுள்ளவிநோதமாகிய பொட்டகிராப் படங்களும் தேவையானவர்கள் அரையணு லேபில் அனுப்பி தங்கள் விலாசம் தெரிவித்தால் 2-அணு பெறும்படியான (2) கேட்லாக் இனுமாக அனுப்பபடும்.

தேவையானவர்கள் அடியிற்கண்டிருக்கும் கம்பெனியாரவர்களுக்கு எழுதிபெற்றுக் கொள்ளலாம்.

டி, கோபால் அண்டு கோ.

கோன்டன் பிரஸ், சூளை போஸ்டு, மதராஸ்.

உ

கடவுள் துணை.

# பாம்பாட்டிச்சித்தர் பதிகம்.

## காப்பு.

அறுசீரடி யாசிரியவிருத்தம்.

மூலத்தின்மேலேநின்று
மூன்றுமண்டலமுந்தாண்டி
சீலத்தின்வெளியாய்வந்து
சிலம்பொலிபரமானந்தக்
கோலத்தின்மேலேநின்று
குகனறுமுகனைப்பாட
வாலிபரூபமான
வைங்கரன்காப்பதாமே

## நூல்.

ஓதிய நூலும்பொய்யே
யுடலுயிர்தானும்பொய்யே
சாதியுமொன்றேயாகுஞ்
சகலமும்வேறதாமோ
வேதியன்படைத்ததல்லால்
விதிதன்னைவெல்லலாமோ
பாதியேபரமேசூழும்
பாய்ச்சலூர்க்கிராமத்தாரே. (க)

உறக்கமோவூனமுள்ளம்
உள்ளமோபறம்போசீவன்
இறப்பதுமுன்னோபின்னோ
ஈன்றதுபெண்ணோவாணோ
கறப்பதுமுலையோபாலோ
காண்பதுமனமோகண்ணோ
பறப்பதுஇறகோகாலோ
பாய்ச்சலூர்க்கிராமத்தாரே (உ)

வெற்றிலைதாழைவாழை
வித்தொன்றுமுளைப்பதொன்றோ

பற்றியயோனிபேதம்
பாருளோரருந்திடாமல்
பெற்றவர்தம்மைத்தேடிப்
பிரந்தரிந்திறந்துபோனார்
பற்றிநின்றலைவதேனோ
பாய்ச்சலூர்க்கிராமத்தாரே. (௩)

தீப்படைக்கடைந்தகோலுஞ்
சிவனுஞ்சீவன்வேறோ
வார்ப்படத்தந்தைதாயார்
மக்களுஞ்சுற்றத்தாரு
மோர்ப்படக்கடைந்தவெண்ணெய்
மோருடன்கூடாவண்ணம்
பாற்படத்திரளவேண்டும்
பாய்ச்சலூர்க்கிராமத்தாரே. (௪)

கொக்குமேற்குடுமிகண்டேன்
கோழிமேற்சூடுங்கண்டேன்
நெக்குறிவாலுங்கண்டேன்
நீரின்மேல்நெருப்புங்கண்டேன்

சற்குலமென்றுசொல்லிச்
சதுர்மறைபேசவேண்டாம்
பக்குவமறிந்துபாரும்
பாய்ச்சலூர்க்கிராமத்தாரே. (ரு)

வித்தொருமரத்தையீனும்
மரமொருவித்தையீனும்
பெற்றதாய்பிள்ளையீனும்
பிள்ளையுமதலையீனும்
உற்றபாற்றயிறையீனும்
உதிரஞ்சுக்கிலத்தையீனும்
பற்றிநின்றலைவதேனோ
பாய்ச்சலூர்க்கிராமத்தாரே. (சு)

மதங்கொண்டதேகந்தன்னை
மற்றொருசுத்தங்காணார்
அகங்கண்டுபுறமுங்கண்டு
மவனுக்கேதாரமானேன்
சுகங்கண்டுதுக்கங்கண்டு
சுக்கிலவழியேசென்று

யகங்கொண்டதேனோவென்னிஞ்
பாய்ச்சலூர்க்கிராமத்தூரே (எ)

ஊருடன்பார்ப்பார்கூடி
யுயர்ந்ததோர்சாலைகட்டி
நீரிலேமூழ்கிவந்து
நெருப்பிலேநெய்யைத்தூவிக்
காற்வயற்றவளைபோலக்
கலங்கியவுங்கள்வேதம்
பாரைவிட்டகன்றதேனோ
பாய்ச்சலூர்க்கிராமத்தாரே. (அ)

சந்தனமகிலுவேம்புந்
தனித்தனிவாசம்வீசும்
அந்தனர்தீயில்வீழ்ந்தா
லதன்மணம்வேறதாமோ
செந்தலைப்புலையன்வீழ்ந்தார்
தீமணம்வேறதாமோ
பந்தமுந்தீயும்வேறோ
பாய்ச்சலூர்க்கிராமத்தாரே. (கூ)

ஒருபனையிரண்டுபாளை
யொன்றுநுங்கொன்றுகள்ளு
அறிவினிலறிந்தவர்க்கு
அதுவுங்கள்ளிதுவுங்கள்ளே
ஒருகுலையுயர்ந்ததேனோ
ஒருகுலைதாழ்ந்ததேனோ
பறையனைப்பழிப்பதேனோ
பாய்ச்சலூர்க்கிராமத்தாரே. (௰)

பாய்ச்சலூர்ப்பதிகம்.

முற்றிற்று.